# பத்திரிக்கைச் செய்தி

1. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தான் புதிதாக வாங்கிய சொத்திற்கு சொத்துவரி ரசீது தன்னுடைய பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்திருந்ததாகவும், மனுவை பார்வையிட்ட வரித்தண்டலர் திரு.விக்ரமன், திருவண்ணாமலை மாவட்டம், அவர்கள் சொத்துவரி ரசீதில் பெயர் மாற்றம் செய்ய ரூ.3,500/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 06.10.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருவண்ணாமலை மாவட்டம், தாலுக்கா அலுவலக வரித்தண்டலர் திரு.விக்ரமன் புகார்தாரரிடமிருந்து ரூ.3,500/- கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

2. மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தன்னுடைய மனைவியின் பெயரில் புதிதாக வாங்கிய சொத்திற்கு சொத்துவரி ரசீது தன்னுடைய மனைவியின் பெயரில் மாற்றம் செய்ய விண்ணப்பித்திருந்ததாகவும், மனுவை பார்வையிட்ட மதுரை மாநகராட்சி 31வது வார்டை சேர்ந்த வரித்தண்டலர் திரு.கிருஷ்ணன், அவர்கள் சொத்துவரி ரசீதில் பெயர் மாற்றம் செய்ய ரூ.3,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 06.10.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது மதுரை மாநகராட்சி 31வது வார்டை சேர்ந்த வரித்தண்டலர் திரு.கிருஷ்ணன் புகார்தாரரிடமிருந்து ரூ.3,000/- கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.